செய்திப் பணிப்பாளர்/செய்தி ஆசிரியர் 21.09.2022

**செய்தி வெளியீடு**

**தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(அடிப்படை 2013=100): ஆகஸ்ட் 2022**

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

**நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு**

**தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk**

2022 ஆகஸ்ட் மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு, புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம், தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் (கடந்த வருடத்தின் அதே மாத தே.நு.வி.சு. மீது நடப்பு மாத தே.நு.வி.சு. இல் சதவீத மாற்றம்) அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கமானது 70.2% ஆக கணக்கிடப்பட்டுள்ளது என தெரிவித்தார். 2022 யூலை மாதம் பொருட்டு பதிவாகிய முதன்மைப் பணவீக்கம் 66.7% ஆக இருந்தது. 2022 ஆகஸ்ட் மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்க வீதத்திற்கான பங்களிப்புக்கள் முறையே 40.4% மற்றும் 29.8% ஆக காணப்படுகின்றன. அதேவேளை, 6.7% முதன்மைப் பணவீக்கத்தின் பெறுபேறாக 2021 ஆகஸ்ட் மாதத்தில் பணவீக்கத்திற்கான உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்தான பங்களிப்புக்கள் முறையே 5.1% மற்றும் 1.6% ஆக காணப்பட்டன. 2021 ஆகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடுகையில், 2022 ஆகஸ்ட் மாதம் பொருட்டு அதிகரித்த பணவீக்கம் பதிவாகியமைக்கான பிரதான காரணம், உணவு மற்றும் உணவல்லாப் பிரிவு இரண்டிலும் நிலவிய உயர்வான விலை மட்டங்களாகும். அதற்கிணங்க, உணவுப் பிரிவின் வருடத்தின் மீது வருட பணவீக்கமானது 2022 யூலை மாதத்தில் பதிவாகிய 82.5% இருந்து 2022 ஆகஸ்ட் மாதத்தில் 84.6% வரை அதிகரித்தது என்பதுடன் உணவல்லாப் பிரிவின் வருடத்தின் மீது வருட பணவீக்கமானது 2022 யூலை மாதத்தில் பதிவாகிய 52.4% இருந்து 2022 ஆகஸ்ட் மாதத்தில் 57.1% வரை அதிகரித்தது.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில் 2022 யூலை மாதத்தில் பதிவாகிய 244.4 இருந்து 2022 ஆகஸ்ட் மாதத்தில் 250.4 வரை அதிகரித்துள்ளது. இது, 2022 யூலை மாதத்துடன் ஒப்பிடுகையில் 6.0 சுட்டெண் புள்ளிகள் அல்லது 2.5 சதவீத அதிகரிப்பொன்றைக் காட்டுகிறது. இந்த மாதம் மீது மாத மாற்றத்திற்கான காரணம், உணவுப்பொருட்களின் சுட்டெண் பெறுமதிகள் 0.9% இனாலும் உணவல்லாப்பொருட்களின் சுட்டெண் பெறுமதிகள் 1.5% இனாலும் அதிகரித்தமையேயாகும்.

உணவுப்பொருட்களின் விலை அதிகரிப்புக்கள் பிரதானமாக உடன் மீன், விசுக்கோத்து, முட்டை, புதிய பழங்கள், கோழி இறைச்சி, குழந்தைப் பால் மா, கருவாடு, மரக்கறி, ரின் மீன், பால் மா, தேங்காய் எண்ணெய், பாண், நூடுல்ஸ், கோதுமை மா, அரிசி மா, மிளகாய்த்தூள் மற்றும் உப்பு என்பன பொருட்டு பதிவாகின. எனினும், சுட்டெண் பெறுமதிகளில் விலை குறைவுகள் மைசூர் பருப்பு, அரிசி, சீனி, பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு, எலுமிச்சம்பழம், செத்தல் மிளகாய், பச்சை மிளகாய் மற்றும் சின்ன வெங்காயம் என்பன பொருட்டு பதிவாகின.

முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 ஆகஸ்ட் மாதத்தில் உணவல்லாப்பொருட்களின் சுட்டெண் பெறுமதிகளின் அதிகரிப்புகளுக்கு பிரதான காரணம், 'அற்ககோல் பானங்கள், புகையிலை & தியக்க மருந்துகள்'(வெற்றிலை),'ஆடையும் காலணியும்', 'வீடமைப்பு,நீர்,மின்வலு,எரிவாயு,ஏனைய எரிபொருள்கள்'(மின்சாரம், பராமரிப்புக்கான பொருட்கள் மற்றும் மண்ணெண்ணெய்), 'தளபாடம், குடித்தன உபகரணம் & வழமையான குடித்தன பராமரிப்பு'(சலவை சவர்க்காரம்), 'சுகாதாரம்' (மருத்துவ/மருந்தகப் பொருட்களின் கொள்வனவு), 'தொடர்பாடல்'(அஞ்சல் மற்றும் தந்தி கட்டணங்கள்), 'உணவகங்களும் ஹோட்டல்களும்', அத்துடன் 'நானாவிதப் பொருட்களும் சேவைகளும்' (சிங்காரிப்புச் சவர்க்காரம்) ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்களாகும். மேலும், 'பொழுதுபோக்கும் கலாசாரமும்' பிரிவில் ஓரளவு சற்று விலை அதிகரிப்பு பதிவாகியது. எனினும், 'போக்குவரத்து'(பெற்றோல், டீசல் மற்றும் பஸ் கட்டணம்)' பிரிவில் விலை குறைவு பதிவாகியது அதேநேரம், 'கல்வி' பிரிவின் விலைச் சுட்டெண் இம்மாதத்தில் மாற்றமின்றி காணப்பட்டது.

2022 ஆகஸ்ட் மாதத்திற்கான தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறு பொருளாதாரத்தில் தளம்பலுறும் உணவு, வலு மற்றும் போக்குவரத்து போன்றன தவிர்ந்த மூலாதார பணவீக்கத்தை பிரதிபலிக்கும் மையப் பணவீக்கமானது, 2022 யூலை மாதத்தில் பதிவாகிய 57.3% இருந்து 60.5% வரை அதிகரித்துள்ளது.




## தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | | | | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | | வருடத்தின் மீது வருட பணவீக்க % | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தே.நு.வி.சு (முதன்மை) | | | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு (முதன்மை) | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு (முதன்மை) | | | தே.நு.வி.சு (மையம்) |
| | | அனைத்து பொருட்கள் | உணவு | உணவு அல்லாத | அனைத்து பொருட்கள் | | | அனைத்து பொருட்கள் | உணவு | உணவு அல்லாத | அனைத்து பொருட்கள் |
| 2021 | ஆகஸ்ட் | 147.1 | 159.4 | 137.4 | 146.5 | 0.3 | 0.6 | 6.7 | 11.1 | 3.0 | 4.7 |
| | செப்ரெம்பர் | 147.5 | 159.6 | 137.9 | 147.2 | 0.3 | 0.5 | 6.2 | 10.0 | 3.0 | 4.8 |
| | ஒக்ரோபர் | 150.6 | 162.6 | 141.2 | 150.6 | 2.1 | 2.3 | 8.3 | 11.7 | 5.4 | 7.2 |
| | நவம்பர் | 155.3 | 171.5 | 142.6 | 153.0 | 3.1 | 1.6 | 11.1 | 16.9 | 6.2 | 8.8 |
| | டிசம்பர் | 161.0 | 182.1 | 144.5 | 155.7 | 3.7 | 1.8 | 14.0 | 21.5 | 7.6 | 10.8 |
| 2022 | ஜனவரி | 166.0 | 188.3 | 148.4 | 159.2 | 3.1 | 2.2 | 16.8 | 24.4 | 10.2 | 12.9 |
| | பெப்ரவரி | 167.8 | 190.6 | 149.8 | 161.2 | 1.1 | 1.3 | 17.5 | 24.7 | 11.0 | 14.1 |
| | மார்ச் | 172.7 | 195.2 | 154.9 | 166.3 | 2.9 | 3.2 | 21.5 | 29.5 | 14.5 | 17.3 |
| | ஏப்ரல் | 190.3 | 218.8 | 167.9 | 182.3 | 10.2 | 9.6 | 33.8 | 45.1 | 23.9 | 27.9 |
| | மே | 208.7 | 242.2 | 182.4 | 197.9 | 9.7 | 8.6 | 45.3 | 58.0 | 34.2 | 37.7 |
| | யூன் | 231.5 | 276.6 | 196.0 | 215.9 | 10.9 | 9.1 | 58.9 | 75.8 | 43.6 | 49.3 |
| | யூலை | 244.4 | 289.3 | 209.1 | 229.0 | 5.6 | 6.1 | 66.7 | 82.5 | 52.4 | 57.3 |
| | ஆகஸ்ட் | 250.4 | 294.3 | 215.8 | 235.1 | 2.5 | 2.7 | 70.2 | 84.6 | 57.1 | 60.5 |

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்